2009 ஜூலை 21] [திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]

அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற அரசு பரிசீலிக்கும்.

(அஐ) அரக்கோணம் எம்.ஆர்.எப். ஆலைத் தொழிலாளர் பிரச்சினை மற்றும் சோளிங்கர் யோக நரசிம்மர் கோயிலுக்கு ரோப் கார் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் எம்.ஆர்.எப். தொழிற்சாலையின் நிருவாகத்திற்கும், அங்கிருக்கின்ற அங்கீகரிக்கப்படாத சில சங்கங்களுக்கும் இடையே நீண்டகாலமாக பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இது தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே வழக்குகூட ஒன்று நிலுவையிலே இருக்கிறது. இந்நிலையில் நேற்றுகூட அவர்கள் மறியலில் ஈடுபட்டார்கள். ஏறத்தாழ 1,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கே பணிபுரிகின்றார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய பிரச்சினையைக் கனிவோடு கண்டறிந்து, அந்த நிருவாகத்திற்கும் சங்கங்களுக்கும் இடையே ஒரு தீர்வை ஏற்படுத்தி அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்காக கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து முக்கியமான இந்த இரண்டு பிரச்சினைகளை வைக்கிறேன்.

சோளிங்கர் யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ஒரு Rope Car–ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுத்தால், கண்டிப்பாக யோக நரசிம்மருடைய முழு அருள் அவருக்குக் கிடைக்கும். (சிரிப்பு) எனவே, அவருடைய அருள் கிடைக்க Rope Car–ஐ அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

(அஒ) வேலூர் மாவட்டம், தோல் தொழில் கழிவுநீரைக் கடலில் கலக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் வினா எழுப்பி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விடையளித்திருக்கிறார்கள். அதாவது ஈரோடு மாவட்டத்தின் கழிவுநீரை Pipe-line வழியாகக் கொண்டு வந்து நாகை பகுதியிலே Ocean discharge செய்ய வேண்டும், அதாவது கடலில் கலக்கின்ற வகையில் 750 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். அதேபோன்ற பிரச்சினை எங்களுடைய வேலூர் மாவட்டத்திலும் இருக்கிறது. வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் தொடங்கி, காஞ்சிபுரம் மாவட்டம் எட்டுகின்ற வரை உள்ள அத்தனை தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரும் பாலாற்றில் கலந்து அதனால் நிலத்தடி நீர் 300 அடி ஆழத்திற்குக் கீழ்வரை மாசடைந்து இருக்கிறது. குடிப்பதற்கே இலாயக்கற்ற தண்ணீரை நாங்கள் குடித்துக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும் அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் பலமுறை வாதாடி, வற்புறுத்திச் சொன்னதன் அடிப்படையில், புதிதாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எங்கள் மாவட்டத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். நாங்கள் இப்போது கேட்டுக்கொள்வதெல்லாம், வாணியம்பாடியிலிருந்து காஞ்சிபுரம் வரையுள்ள tannery–களிலிருந்து வருகின்ற கழிவுநீரை 450 கோடி ரூபாய் செலவில் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள முறையில், Pipe-line மூலமாக Ocean discharge செய்து, சென்னையில், கடலில் கலப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 10–25

(அஓ) நாமக்கல், குருவம்பட்டி தனியார் ஆலைத் தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6–5–2009 அன்று, நாமக்கல், குருவம்பட்டியில் ஒரு தனியார் மில்லில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர்கள் உயிரிழந்திருக்கின்றனர். அதில் ஒருவர் நாமக்கல் பகுதியைச் சேர்ந்தவர். 16 பேர்கள் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டு பேர்கள் தீக்காயங்களோடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இன்னும் சிகிச்சை பெற்று

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS